Tit-Bits of Animal Life,

Vol. 3. No. 9. April 1923,

197924

590

Vol. XXIII] April, 1923 [No. 2

Society for the
Prevention of Cruelty
to Animals, Madras

ENGLISH & TAMIL

7-MAY 192?

TIT-BITS OF ANIMAL LIFE

ஜந்து வர்த்தமான ஸாரம்.

Copies can be had on application to the Honorary Secretary, S.P.C.A., Vepery, Madras.

Annual Subscription, Half a Rupee, payable in advance.

EDITED BY

Rai Saheb G. Venkataranga Rao, M.A.,

Member of the S.P.C.A.

சென்னை: ஜீ. ஹி. ஸி. சங்கத்தின் மெம்பராகிய

ராய் சாஹேப் ஜி. வெங்கடாங்க ராவ், எம்.ஏ. அவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

PUBLISHED QUARTERLY.

A QUARTERLY JOURNAL—Vol. XXIII.—Number 2.

April, 1923—௵ ஏப்ரல்௴

CONTENTS

IN ENGLISH	PAGE
Viscount Grey on Bird Life	11
Kindness to Animals Repays. By Robert Page Lincoln	13
Mr. George Wharton James and His Song-Sparrow	14
A Case of Simian Tenderness and Devotion	,,

பொருளடக்கம்

தமிழில்	பக்கம்
பட்சி, பறவைகள்	15
தவளைகள்	16
ஜீவகாருண்யத்தைக் குறித்து ஒரு கதை (மகாபாரதத்திலுள்ளது)	18
பகிரங்கமாக நாய்களை யடித்துக் கொல்லுதல்	19
சையாம் தேசத்து குரங்குகளின் புத்தி சாதுர்யம்	,,
பசுக்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு புதிய உபாயம்	20
எஸ். பி. சி. ஏ.	,,

TIT-BITS OF ANIMAL LIFE

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES

ஜந்து வர்த்தமான ஸாரம்

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ய விளக்க மும்மாதப் பத்திரிகை

சம்புடம் XXIII.] **APRIL,** 1923-ஞு ஏப்பிரல்மீ [இலக்கம் 2.

VISCOUNT GREY ON BIRD LIFE.

Viscount Grey of Fallodon delivered an address on 'The Pleasure in Out-door Nature,' with special reference to his own study of bird life, at the meeting of the School Nature-Study Union on 2nd January last. Sir Frederick Keeble, Sheradian Professor of Botany at Oxford, presided. The meeting was in connexion with the annual conference of Educational Associations which is being held at University College.

Lord Grey said that the subject was rather difficult to approach from the point of view of teaching; but given that the teacher was capable and the pupil was willing, he could make sure of imparting not only knowledge, but pleasure. Imparting pleasure was an important part of education. For people who had a reasonable amount of leisure, the habit and the capacity for spending that leisure in a way that would bring them interest and pleasure was a great factor in making life contented. If they could impart the power of taking real pleasure in the best poetry and the best literature, they would be giving the most easily accessible and most permanent and lasting form of making leisure satisfactory. Books were easily accessible, and all that was necessary for the enjoyment of them was to find some quiet spot out of doors, or access to a room which had no telephone in it, or, if it had, then with the telephone disconnected. (Laughter.)

By books he meant the power of taking pleasure in the best literature; and alongside he put the capacity for finding pleasure in out-door nature. The beauty of the world, and the interesting things in nature, were there for everybody to enjoy; but the fact that one person enjoyed them did not diminish the power of others to enjoy them, provided the simple rule was observed that in taking their pleasure in out-door nature they did not destroy or disturb it. So long as they did that, their pleasure was not diminishing anyone else's pleasure. For instance, if they were in one of the London parks, and a thrush or a blackbird was singing, they stopped to enjoy the song. But if some one else stopped and threw something at the bird, the whole thing was disturbed.

Another thing about pleasure and out-door nature was that the best kind of pleasure depended not on novelty, but on enjoying things which recurred every season of the year, and which brought a common aspect of beauty.

EPICUREANISM IN PLEASURE.

If any one wanted to be an epicure in pleasure, it was worth while remembering that there were three parts in pleasure—anticipation, realization, and retrospect. They could only have perfect anticipation if it was pleasure that they knew before. That they got in out-door nature from the procession of seasons and the fact that every year these brought round the same procession of beauty and of interest. His own knowledge of birds was not that of an expert; but he had great pleasure in the observation of birds. There were some people who took no pleasure in birds; but to a large number they were a source of very great interest and pleasure. They had certain remarkable and attractive natural qualities. There was the power of flight, which was in itself a thing worth considering. There were all sorts of ways

and manners of flying among birds. Another aspect was their plumage—their wonderful variety of colouring. Then they laid eggs of various colours, and built nests in many shapes and of different materials. The long-tail tit was a bird which built the most elaborate nest, and the time it took in building the nest, in the hatching of the eggs, and the growing of the birds was very long. When he was a member of the Government and could only get out of London at week-ends, he went to his cottage in the country, and there on a Sunday morning about the middle of March he observed a pair of long-tail tits building their nest in a sweet-briar bush. Every week-end he watched the building going on, but it was not till May 19 that he saw the young birds come out of the nest. During these two and half months the nest was a matter of interest and pleasure to him; and any of those present living in the country could have precisely the same experience. The long-tail tits' nest was interesting from another point of view. Early in March they would see long-tail tits in pairs; they were not at all shy; and if anyone chose to put small feathers in the edge near the nest, they could stand by and see the birds take the feathers and use them in the building of their nest. It had been computed that one of these nests contained about nine hundred feathers.

THE WREN'S BED-ROOM.

Again, take the instance of a bird that built not one nest, but more—the common wren. The nest used for eggs was lined with feathers; but one or more nests were often built, apparently with equal care and skill, except that they were not lined with feathers. These nests did not become unoccupied dwellings. (Laughter.) He found one of them near his house, and in the autumn and winter he used to go and look at it after sunset. Whenever he went a wren came out of the nest, so that it was clear the nest was not built for eggs but was used as a bed-room through the autumn and winter.

If people wished to appreciate our common birds, they must learn their songs. If they were fond of songs of birds, they should make a point of not letting any month in the year go by without hearing robins and wrens sing. He heard his January wren on Monday, so this month was safe. (Laughter.) The wren's song was one of the most remarkable because of its loudness compared with the size of the bird. When he considered the smallness of its body, the loudness of its song, and the animation of the body, he became almost afraid that the little body would be shattered by the vehemence of the song. To hear a blackbird's song in the early part of the year was something to look forward to.

Then came the small birds which had spent the winter in Africa or farther south. There was the feeling of romance as to the immenseness of the journey they might have accomplished since they last heard them. One got into the habit, if one lived in the country, of listening for birds in the same place and at the same time every spring. Other birds migrated to great distances. One of them was the woodcock. He was once lying on the sandy hills by the shore in Northumberland on a fine day at the end of November looking up at the sky, when he saw a woodcock arrive. He turned his head to see where it lighted, some fifty yards away, and he went to the spot to see whether it was tired. As he walked along, the bird rose and flew farther away without showing any sign of being tired. From that circumstance he judged that in ordinary weather birds could cross the North Sea in one flight without being exhausted.

As regarded migration—in 1921 there were reared in his garden two or three broods of widgeons. Three of the young ones grew up so tame that they would take food out of his hand. Last spring they went away; but in November of last year the female bird came back, and one day came up to him and took food exactly in the same way as she did before flying away. Three weeks afterwards one of the male birds came back, and did the same thing.

Birds had, to a greater degree than any other animate creature except man, the power of expressing joy. Nearly all our British birds were monogamists. Others that came were polygamists. Family life with British birds was continued when the young birds grew up. The family life of partridges was extraordinarily attractive. The robin had little family life. The male and female did not spend the winter together, but each remained absolutely solitary in the autumn and winter.

197924
N23.22.2

In concluding, Lord Grey said that what he really had in mind in addressing them was to try and show them the sort of pleasure in bird life which it was open to any one who had an interest in bird life to have. They only wanted the power of being able to walk about, good eyesight, good hearing, a push-bicycle and a pair of field glasses. The instances he had given were only illustrations of out-door nature. There were many others—flowers, insects, weather, etc.—but if people found that they had not the capacity for taking pleasure in out-door nature, then let them try and find something else in which they would get as much pleasure, and which was as lasting and as engrossing as that which those of them who had the capacity for it got from out-door nature. (Cheers.)

KINDNESS TO ANIMALS REPAYS

By Robert Page Lincoln

Does kindness to animals repay us? I do not think that the people are so debased as to measure their kindness to animals, domestic and otherwise, by the amount of money they will derive by so doing, but if such is the demand, it will be noted that kindness to animals repays in *money* over and over again. Let me point out instances.

Here we have a certain farm run by a hot-headed, incorrigible, utterly incompetent man. His cattle look thin and starved; they are fidgety and wide-eyed; they move away or run at approach. When the farmer lets them out of the barn, they dart out half crouching, usually followed by oaths, sticks or prodded with forks. The milk that he gets from his cattle hardly pays to bother with, and this is strange, too, for some of the cattle come from a race of traditional milk givers in quantity; they seem to have plenty to eat in the pastures—and yet they are starved, run-down and some are even despondent looking. What is the cause? Why ask that? There is no more sensitive a creature than the cow. Probably we haven't stopped to study her or inquire into her feelings, her views on life, her joys and sorrows. On the farm mentioned above (which is drawn from life) the cattle were well-nigh ruined mentally and physically by abuse and the absence of kindness. To these cattle life must have been hell; the barn, the torture chamber; the curse, the pronouncing of doom; and life, one unmitigated misery.

Let us take another farm. The cattle are sleek and fat; they move at ease and without the slightest sign of fear in their eyes; upon approach they look up in a trusting way, as though knowing they will be caressed with a gentle hand instead of a club. Their owner takes pride in them; pets them and strokes them under the jaw which they find so pleasant. He talks to them in a half-tender, meditative way, and calls them by name, and they seem to respond; he keeps his barn clean and the cattle curried, where the other farmer had a foul, unclean barn and the sides of the cattle encrusted with dry manure. As a result of this care and consideration, his reward is three or four times greater in the amount of milk produced—simply because they are well taken care of and treated with kindness. Have you noticed with what difficulty a hard-swearing, cruel man goes about milking a cow? She will not 'give down' the milk and only long stripping results in the amount she does give. Probably she feels if she can do no more she can at least prevent these brutes from taking her milk. On the other hand, the cows well cared for and spoken to give their milk to the last drop without the least trouble. In this manner one sees how kindness repays in actual money; but the greater pay is the knowledge born in you that you are kind to your animals; and you have a clear conscience.

On the other hand the hot-headed person first spoken of knows he has been cruel to his animals; as a result he is profoundly disgusted with himself and the more disgusted he is with himself, the more does he feel that he should vent his spleen on the animals that he has at his mercy. From what I have noticed through observation, I should judge that there are thousands of animals that are used by men as objects to beat, stone and club; to exhaust their grouches on; 'sour stomach sprees,' they may be designated. Such men should be apprehended. No man can fall lower than one who has a grouch and to get rid of it 'picks on' a poor creature and beats and stones it, nine times out of ten, for no reason whatever. These men are as much

criminals as the most hardened hold-up man and should be treated as such.

Kindness to animals pays big dividends in a clear conscience, broadens the mind and includes more than human beings in the great perspective of life.

Have you ever noticed a farm where the chickens come and pick corn from your hand, where the cattle come up to be petted or to playfully butt their heads against you, where the horse seeks a lump of sugar in your pocket, where the family cat sits on the porch and rises to rub against your leg as you come up instead of darting under the house terrified beyond name? If you ever find such a place, there pitch your camp and warm your soul, too, before the fires of kindness that pervade the place. There are such nooks in this selfish world. If you find them you are fortunate.

Mr. George Wharton James and His Song-Sparrow

There have been in this world few companionships of any kind more touching and beautiful than that between Mr. George Wharton James, of California, and Scraggles, a little baby song-sparrow, which had been accidentally orphaned, and which Mr. James came upon one day, and took home with him and raised. The poor little waif was at first very much afraid, and resented vigorously the advances of her new-found friend; but, through kindness, her little heart was won, and henceforth there sprang up between her and her human friend a wonderful attachment. She became so fond of Mr. James finally that she wanted to be with him all the time, day and night, and became disconsolate whenever she was separated from him. She soon became familar with Mr. James' desk habits and could tell whether he was reading or writing. When he wrote, she liked to frolic with his pen, taking the pen into her beak and holding on to it, as he traced the lines across the paper, and contending with Mr. James for the privilege when he playfully pretended to keep her away. Often, when tired, she would sit on his shoe or the finger of his left hand, sound asleep, while he wrote. She would sit this way for hours at a time, seemingly perfectly content merely to be in the presence of her precious foster-parent. She would follow Mr. James on the street, as devotedly as a dog, and would flutter down into his hand as if it were a nest, and peck at his fingers until he would 'hover' her with his other hand, when she would give herself a little shake, put her head under her wing, and drop off to sleep.

'The poor little creature was never well,' says Mr. James, 'and always seemed hungry for affection; so I made a little bed in the drawer of my writing-desk, and often, when I sat writing at night, I would put her to bed there. My bed-room was next to the library, and I generally left both doors open. As a rule, I was up very early, long before she was ready to awaken; but sometimes she would awake first. Then she would come fluttering and hopping into my bed-room, and talk to me in her quick, querulous little way until I put my hand down to the floor for her to jump into, in order to be lifted into the bed. There she would play hide and seek in my beard, and try to find dainty morsels in my lips—for she had long before learned to take food from me in that way—and sharply peck at my teeth when I gave her nothing. She enjoyed it immensely when I would suddenly raise my knees and make a high mountain, so she could flutter merrily down into the valley. Then I would lower my knees and make a level plain, only to surprise and please her by creating it into a mountain again.'

'Poor, sweet, affectionate little darling! She never learned to fly. Her death was accidental and tragic, and the result of her complete and absolute confidence in me. When my daughter and I dug a tiny grave for her and lined it with the lacelike blossoms of what the children call 'the bird's nest,' we were neither of us ashamed that the tears fell fast. We covered her with the blossoms and then the earth, and there left her.'

A Case of Simian Tenderness and Devotion.

A member of a shooting-party killed a female monkey, and carried her body to his tent under a banyan-tree. The tent was soon surrounded by forty or fifty of the tribe, who made a great noise and threatened to attack the aggressor. When he presented his fowling-piece, the fearful effects of which they had just witnessed, and appeared perfectly to understand, they retreated. The leader of the troop, however, stood his ground, threatening and chattering furiously. The sportsman, who perhaps felt some little degree of compunction for having killed one of the family, did not like to fire at the creature and nothing short of firing would suffice to drive him off. At last, finding threats of no avail, the broken-hearted creature came to the door of the tent and began a lamentable moaning, and by the most expressive signs seemed to beg for the dead body of his beloved. It was given to him. He took it sorrowfully in his arms and bore it away to his expecting companions. Those who were witnesses of this extraordinary scene resolved never again to fire at one of the monkey race.

பட்சி, பறவைகள்.

(தொடர்ச்சி.)

அந்த அம்மாள் பக்ஷிகளை நேசித்தபடியால் அவற்றின் செய்தி அவளுக்கு விளங்கினது. பக்ஷிகள் இன்பமாகப் பாடுகையில் அவை தேவனைத் துதிக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமே. ஆதலால் ஒரு குருவியைக் கைதியாக்கும்போது தேவன் கேட்கக்கூடிய இனியபாட்டை நீங்கள் களவு செய்துகொண்டு போகிறீர்களன்றோ. இத்தீமையான வழக்கத்திற்கு விரோதமாக நாமெல்லோரும் நம்முகத்தைத் திருப்பி, நம்சிநேகிதராகும் பக்ஷி, பறவைகளைக் காப்போமாக. ஜீவனைப் பார்க்கிலும் சுயாதீனம் அருமையல்லவா? சிறைச்சாலை எவ்வளவு நேர்த்தியாக விருப்பினும், அங்கே எந்த அடிமையும் சந்தோஷங் கொண்டு பாடமாட்டான். அவன் தன் சிநேகிதரிடமிருந்து பிரிந்திருக்கிறபடியால் மகிழ்ச்சியாயிருக்க முடியாது.

பாடசாலைகளிலிருக்கும் உபாத்திமார் தங்கள் வகுப்புகளிலுள்ள பிள்ளைகளுக்கு பக்ஷம், இரக்கம், என்பதைப்பற்றி போதித்து வரவேண்டும். பேச சக்தியற்றும் பலவீனமாயுமிருக்கிற பட்சி மிருகம் முதலியவைகளுடைய கவலைகளையும் மேற்போட்டுக் கொள்வது நமது கடமையே.

சேவல்களையும், கௌதாரிகளையும், சண்டைசெய்ய விடுவதற்காகவே வளர்ப்பது எவ்வளவு பெரிய கொடுமை! பக்ஷிகளை இப்படிச் சண்டைசெய்ய விட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதைவிட சந்தோஷத்தை உண்டாக்கும் வழிவகைகள் வேறு எத்தனையோ இருக்கின்றனவே. தங்கள் பெரியோர் கொடுமையான தொழில் செய்வதைப் பார்த்துக் கொண்டிருக்கும் பையன்கள் பக்ஷமுள்ளவர்களாயிருக்கக் கூடுமென்று எதிர்நோக்குவது எவ்வளவும் தகாது. கொடுங்காட்சிகளைப் பார்ப்பதிலும், தீஞ்செயல்களைச் செய்வதிலும் பிள்ளைகளுக்கு வெறுப்பு உண்டாகத்தக்கதாக நாம் அவர்களை வளர்க்க வேண்டும்.

ஓர் காலத்தில் ஒரு துரை அழகிய ஓர் ஜாதிக் கோழியைச் சுட்டு வீழ்த்தினராம். அது தரையில் விழுகையில் அவரைப் பார்த்து, "நீர் ஏன் என் ஜீவனை அழித்து விட்டீர்? நான் உமக்கு ஓர்காலும் ஓர் தீமையும் புரிந்ததில்லையே! உம்முடைய உயிர் உமக்கு எவ்வளவு அருமையாக இருக்கிறதோ அவ்விதமே என் உயிரும் எனக்கிருக்கிறதே" என்று சொல்லுவதுபோல துக்கமுகத்துடனே அவரை எட்டிப்பார்த்து உயிர் துறந்ததாம். அதனைக் கண்ணுற்று அவர் மிகவும் வெட்கி துப்பாக்கியைத் தரையில் எறிந்துவிட்டுத் தாம் இனி ஓர் பறவையையும் சுடுவதில்லை யென்று சத்தியமும் பண்ணிக் கொண்டனராம்.

பக்ஷிகள் மிகப்பிரயோஜனமாயும், தீங்கற்றவையாயும், இருக்கின்றன. விருக்ஷங்களை கெடுத்துப் போடும், பூச்சி புழுக்களை அவை தொல்லுகின்றன. அழகிய தோகையில்லாததும், புசிப்பதற்குத் தகாததுமாகிய பக்ஷிகள் மிகப்பாக்கிய முள்ளவைகள் தானே.

ஈகரட் என்று அழைக்கப்படும் ஓர் ஜாதிப் பறவை எகிப்து தேசத்தில் கட்டோடே அழிந்து போகத்தக்க மோச நிலைமையில் ஓர் காலத்தில் இருந்தது. ஏனென்றால் தோகைகளுக்காகப் பறவைகளை வேட்டையாடிப் பிடிக்கிறவர்கள் அவற்றைப் பிடித்து இறகுகளை விற்று வந்தனர். இப்பக்ஷிஜாதியின் அருமையை நன்குணர்ந்த மேஜர் பிளவீர் என்னும் ஓர் துரை நாடெங்கும் பல கூட்டங்கள் கூட்டிவைத்து எகிப்து தேசத்தில் பருத்திச்செடியை அழித்துப் பெரு நஷ்டத்தை வருவிக்கும் பூச்சி புழுக்களை இஜ்ஜாதிப் பக்ஷிகள் அழித்துப் போடுகின்றன என்றும், இப்பக்ஷிகளை வேட்டையாடுவோர் லாபத்திற்காக இவைகளைக்கொன்று தேசத்திலிருந்து [illegible] கொள்

197924

ளுகிறார்களென்றும் நன்குணர்த்தி, வற்புறுத்திப் பேசினர். அவர் பேச்சை ஜனங்கள் கேட்டு காரியத்தை யுணர்ந்து அச்சமுற்று அவை கடைசியாக முட்டையிட்ட கூடுகளைப் பாதுகாக்க காவலரை நியமித்து அப்பறவை ஜாதியை அழிவினின்று தற்காத்தனராம்.

இச்சங்கதியின் விசேஷித்த பாகம் என்னவெனில், இப்பக்ஷிகள் அழியா வண்ணம் காக்கப்பட்ட எகிப்தின் ஓர் பாகத்தில் சுமார் இரண்டு லக்ஷம் தொகையான இந்த ஈகரெட் குருவிகள் இருந்தனவாம். இவை அந்த நாட்டிலுள்ள பருத்திப் பூச்சிகளைக் கொன்று தின்று விட்டதால் ஓர் பருவகாலத்தில் மாத்திரம் அங்குள்ள சமுசாரிகளுக்கு (£. 52,000,000) ஐந்து கோடியே இருபது லக்ஷம் பவுன் லாபம் கிடைத்ததாம். ஒவ்வொரு ஈகரெட் பறவையும், எகிப்து தேசத்திற்கு வருஷத்தில் 10 பவுன் விலை பெருமானதாயிருக்கிறதென்று கணக்கிட்டிருக்கிறார்களாம்.

பேசும் திறமையற்ற சிருஷ்டியைப்பற்றி நீங்கள் படிக்க முயல்வீர்களானால் ஒருபோதும் ஊக்கமன்றிருக்க முடியாது.

சிறிது காலத்திற்குமுன் ஒரு கப்பல் அமிழ்ந்து போகும் சமயத்திலிருந்தது. அதற்கு உதவி யனுப்பவும் வழிவகை யொன்றுங் காணப்பட வில்லை. ஆகையால் ஓர் புறாவை அனுப்பினார்கள். கொந்தளிப்பின் மத்தியிலும் அப்புறாபோய் காற்றிலும், மழையிலும் அடிபட்டு குறித்த இடம் போய்ச் சேர்ந்தது. ஆயினும் அது பட்ட கஷ்டத்தினால் மரித்துப்போயிற்று. ஆனாலும் அது, தான் கொடுக்கவேண்டிய செய்தியைக் கொடுத்துவிடவே, மனிதரின் உயிர் பிழைத்தது. அவ்வுண்மையுள்ள புறாவிற்கு வந்தனம்! அம்மனிதர் அதற்குப்பின் ஓர் புறாவிற்கும் தீமை நேரிட விட்டிரார் என்று நாம் நிச்சயமாய் இருக்கலாம்.

ஜெர்மானியர் நஞ்சுப் புகையை அனுப்புகையில் ஆங்கிலேயரை எச்சரிக்கை செய்ய அகழிகளில் பக்ஷிகளை வைத்திருந்தார்கள். பக்ஷிகள் எச்சரிக்கை செய்யவே அவர்கள் புகை மூடியைப் போட்டுக் கொள்வார்களாம்.

நீங்கள் கொஞ்சம் சிரமம் எடுத்துக் கொண்டால் பக்ஷிகளின் காரியங்களைப்பற்றி அறிந்துகொள்ளக் கூடியவர்களாயிருந்தால் பக்ஷிகளும், மிருகங்களும், அடிக்கடி மோசம் வருவதைப் பற்றி உங்களுக்கு எச்சரிப்பு கொடுக்கும். இந்த ஊமை ஜாதி சிநேகிதருக்காக வாலிப சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த சிறுவரும் நன்மை புரியக்கூடும். ஒவ்வொருவனும் தன் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றுவானாயில் கொடுமையென்பது கட்டோடு ஒழியும்.

பறவைகளும், காடுகளில் பாடசாலைகள் அமைத்திருக்கின்றன. தாய்ப்பறவை குஞ்சுகளுக்குப் பறக்கவும், மோசமிருக்கையில் எப்படி ஒளித்துக்கொள்வதென்றும், இன்னும் அநேக காரியங்களையும் கற்பிக்கின்றன. அவை தங்கள் தாய் பறவைகளுக்குக் கீழ்ப்படியாமல் போய்விடின் கீழ்ப்படியாப் பிள்ளைகளைப் போலவே துன்புறுவர் என்பதும் உண்மையே. பக்ஷி பறவைகளுக்குள்ளும், மிருக ராசிகளுக்குள்ளும் கீழ்ப்படிதல்தான் பெரிய விதி.

இழிவும், கொடுமையுமான, எந்தக் காரியத்தையும், வெறுக்க நமக்குப் போதிக்கவும், உருக்கமான இருதயங்களை நமக்கருளும் கடவுளை நோக்கிப் பிரார்த்திப்போமாக.

தவளைகள்.

(முன் நம்பரின் தொடர்ச்சி.)

அநேக ஜாதித் தவளைகள் தம்முட்டைகளை ஜலத்திலேயே இட்டு வருமாயினும், மிட்ஒயிப் (Midwife toad) தேரை ஜாதிமட்டும் தம்முட்டைகளைத்தரையிலேயே இடுகின்றன. இந்த ஜாதித்தவளை 20 முதல் 50 முட்டைகள் வரையில், பசைபோன்ற கயிற்றில் இடுகின்றது. இப்படி இடுகையில் பெண்தவளையும் இம்முட்டைகளைப் பாதுகாப்பதில் தன் முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. முட்டையிட்டானதும் ஆண்தவளை அக்கயிற்றினருகில் சென்று, அக்கயிற்றின் நடுவில் குதித்து, தன் பின்னங்காலில் அக்கயிற்றை மாட்டிக் கொண்டுபோய்க் காப்பாற்றிவருகிறது. மூன்று வாரம் சென்றபின் இம்முட்டைகள் குஞ்சுகளாக மாறுகின்றன. இம்முட்டைகள் உலர்ந்து அழிந்து போகா வண்ணம், ஆண்தவளை தன் காலில் தாங்கிய முட்டைகளின் தொகுதியை குளிர்ச்சியுள்ள இடங்களெல்லாம்கொண்டு செல்லுகிறது. அடிக்கடி இம்முட்டைகளைப் பக்கத்துள்ள ஜலத்தில் நனைத்துக் குஞ்சாகுமட்டும் ஆண்தவளை காப்பாற்றிவருகிறது.

மரத்தில் வசிக்கும் தவளைகளில் போர்னியூத்தீவிலும் (Borneo and Java Islands) ஜாவாத்தீவிலும் வசிக்கும் தவளைகள் பறக்கும் தவளையினத்தைச் சேர்ந்ததென்னலாம். இப்பறவைத் தவளையின் தேகம் 4 அங்குல நீளமுள்ளது. இப்பறவைத் தவளையின் பின்னங்காலிலுள்ள வலையை விரித்தால் 4 சதுர அங்குலம் விரியும். எல்லாக் கால்களையும் அகல விரித்தால் 12 சதுர அங்குலம் விரியும்.

நிறம் மாறும் தவளை.

சிங்களத்தீவில் (Cingalese Members of Frog) வளர்ந்து வாழும் ஒருவகை ஜாதித் தவளை அடிக்கடி நிறம் மாறும் இயல்புடைத்து. காட்டுமரங்களின் வர்ணங்கள் பலவற்றிற்குத் தக்கவாறு அக்காட்டில் வசிக்கும் தவளைகள் பலவேளைகளில் தம் நிறங்களை மாறுபடுத்திக் கொள்ளும்.

இலைத் தவளை.

இலைகள் பலவற்றின் வர்ணம், வடிவுபே தங்களுக்குத் தகுந்தாற்போ லிருப்பதனால் தவளைகள் இலைத்தவளை யென்றும் பெயர் பெற்று சில விடங்களில் வாழ்கின்றன. இத்தவளைகளும் தாம் வாழுமிடங்களுக்குரிய தம் நிறம் முதலியவைகளை மாற்றிக் கொள்ளுகின்றன.

கோஸ்டா (In Costa Rica) ரீக்கா என்னும் பிரதேசத்தில் வாழும் தவளை ஜாதியொன்று தான் வாழுமிடத்தில் வசிக்கும் ஒருவகைப் பாம்பின் வர்ணம், விஷத்தன்மைகளையொப்ப, தன் தன்மையை மாற்றிக் கொண்டு உயிர்வாழ்ந்து வருகிறது.

தவளைகள் தேரைகள் முதலிய இந்த ஜாதிப் பிராணிகளின் தோல் உட்புறத்தில் பால்போன்ற திரவப்பொருள் ஒன்றிருக்கிறது. இப்பிராணிகள் பயமுறுத்தப்பெற்ற பொழுது, இவை அத்திரவப்பொருளை வெளிவிடுகிறது. தன்னைக் காத்துக்கொள்ளுதற் பொருட்டே இத்திரவப்பொருளை அது வெளிவிடுகிறது. ஆகவே, இத்திரவப்பொருளில் சிலவிதமான விஷப்பொருளும் கலந்திருக்கிறது. இப்படிப்பட்ட விஷம் கலந்த திரவப்பொருள் மனிதரத்தத்தில் புகவிடப்பட்ட பொழுது, விஷமாகமாறித் துன்பம் விளைக்கவும் ஏதுவாகும். தென்அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர்கள் (Red Indians) குரங்குகளை வேட்டையாடிக் கொல்ல எய்யும் அம்புகளில், மேற்கூறிய தவளைகளினின்றும் கிடைக்கக் கூடிய பால்போன்ற விஷமுள்ள திரவப்பொருளை எடுத்து, அம்பின் கூரியவாய்களில் தீட்டிக் குரங்குகளை எய்து கொல்லுகிறார்கள்.

குறுகிய வாய்த்தவளை (Narrow mouthed Frog) (Short headed Frog) குறுந்தலைத் தவளைகள், கூரிய மூக்குத் (Sharp nosed Frog) தவளைகள், கொம்புள்ள (Horned Frog) தவளைகளென்றும் தவளைச்சாதிகள் பலவகைப் பட்டன. குறுகியவாய்த் தவளைகள் மிகவும் குறுகிய வாயையேயுடையன. குறுந்தலைத் தவளைகளின் தேகம், பருத்து இந்தியாவின் பந்துகளைப்போ லிருப்பதனால் அது அப்பெயர் பெற்றது. இப்படியிருக்கும் தவளைகளை நிஜமான பந்துக்கள் என்றே நினைக்கும்படியாயிருக்கும். கூரிய மூக்குத் தவளையின் தலை திரிகோண வடிவமாயமைந்திருக்கும். தலையின் ஓரங்கள் கூர்மையாயிருக்கும். கொம்புத் தவளைகள் மாம்ஸ பக்ஷிணிகள். அடிக்கடி நிறம் மாறும் தன்மையன. அவைகளின் வாய்கள் மிகுதியும் அகன்றிருக்கும். பிரேஸிலில் இம்மாதிரித் தவளைகள் 8 அங்குல நீளமுள்ளதாயிருக்கும். ஆனால் இந்த ஜாதியில் இத்தேசத்தில் அகப்படுபவைகளே மிக்க அழகாயிருக்கும். இவை மிகவும் தைரியமும் கோப குணமும் பொருந்தியன. தம்மை எதிர்த்தவைகளைத் தாமும் எதிர்த்து நாய்போலச் சட்டிக்கும் தன்மையுடையன. மற்றும் பல சமயங்களில் இவைகள் இடும் சப்தம் மணியடிப்பதுபோலிருக்கும். சாதாரணமான காலங்களில் அவைகள் மணலில் மூழ்கி மறைந்து கிடக்கும். அப்போது அதன் முதுகுமட்டும் மேலே தெரியும். இப்படி இத்தவளைத் தன்னாகாரத்தை எதிர்பார்த்து மறைந்து இருக்கும். இப்படி மறைந்திருந்த இச்சாதித் தவளை மற்ற ஜாதித் தவளைகளையும், சிறு பக்ஷிகளையும் சிறிய நீர் வாழும் பிராணிகளையும், சில வேளைகளிலும் தன் சக்திக்கு மேற்பட்ட பிராணிகளையும் பிடித்து வருத்தி உயிரைவாங்கி உண்ணத் தயாராயிருக்கும்.

முற்றிற்று.

ஜீவகாருண்யத்தைக்குறித்து ஒரு கதை.

(மகாபாரதத்திலுள்ளது)

முன்காலத்தில் குருசிரேஷ்டரான தருமபுத்திரர் ராஜ்யத்தை ஆண்டுவருகையில் கிருஷ்ணனும், பலராமரும் பரமபதமடைந்ததைக் கேட்டு மிகவும் துக்கித்தார். நாம் இனி இந்த லோகத்திலிருந்தென்னவென்று வெறுப்படைந்து சுவர்க்கத்தை யடைவதற்காக தம் சகோதரர்களுடனும், மனைவியுடனும் வடதிசை நோக்கிப் புறப்பட்டார். அச்சமயம் அவர்களுடன் ஒரு நாயும் கூட வந்தது. அந்த நாயுடன் அவர்கள் கங்கா முதலிய நதிகளையும், வனங்களையும், மலைகளையும் தாண்டி மேரு பர்வதத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் முதல் அவர் மனைவியும் பின்பு அவருடைய சகோதரர்கள் ஒருவர்பின் ஒருவராய் மரணமடைந்தார்கள். இவ்வித துக்கசம்பவத்தைப் பார்த்தும் சிறிதும் பயமின்றி செல்லுகின்ற தர்மபுத்திரருடன் நாய்மாத்திரம் சென்றது. இவ்விதம் தர்மபுத்திரர் வருவதை தேவேந்திரன் அறிந்து, திவ்விய விமானத்தில் ஏறிக்கொண்டு தர்மபுத்திரர் முன்வந்துநின்றார். "தர்மபுத்திரா! இந்த தேவ விமானத்தில் ஏறி சுவர்க்கத்திற் றுவந்து சுகங்களை அநுபவித்துக் கொண்டிரு" என்று தேவேந்திரன் சொன்னார்.

தர்மபுத்திரர் "ஓ பிரபுவே! இந்த நாய் புறப்பட்டதுமுதல் என்னைவிடாமல் பின் தொடர்ந்து வந்திருக்கிறது. என்னிடத்தில் விசுவாசமுள்ளதாயுமிருக்கிறது. இதுவும் சுவர்க்கத்திற்குவரவேண்டும், எனக்கு இதன் மீது இரக்கம் அதிகம்" என்றார்.

இந்திரன், "நாய் மோக்ஷபூமியில் தன் காலை வைக்கக்கூடாது. அழிவின்மையும், எனக்கிருப்பதுபோல் அந்தஸ்தும், சுவர்க்கத்திலுள்ள சுகமும் தங்களுக்கு கிடைத்திருக்கிறது. இந்த நாயை விட்டுவிடுங்கள். இது தாங்கள் சுவர்க்கமடைவதைத் தடுக்கிறது. அவ்விதம் செய்தால் குரூர செய்கையாகாது. மண்ணுலகிற் பிறந்த அந்த நாய் பூமியில் வசிக்கட்டும்." என்றார்.

"தேவேந்திரனே! நான் அவ்விதம் செய்யமாட்டேன். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற ஜந்துவை விட்டுவிட்டு மோக்ஷ சுகமடைய நான் விரும்பவில்லை" என்று தர்மபுத்திரர் பதிலுரைத்தார்.

"நாயுடன் வரும் மனிதருக்கு மோக்ஷம் கிடைக்காது. நாயை விட்டுவிட்டு வாரும், காலமோ வேகமாய் செல்லுகிறது." என்று தேவேந்திரன் சொன்னார்.

'விசுவாசமாயிருப்பவர்களை விட்டுவிடுவது மிகவும் பாபம்' என்று ஞானிகள் சொல்லுகிறார்கள். "மோக்ஷமடைவதின் பொருட்டு இந்த நாயை நான் விட்டுவிடவே மாட்டேன்." என்று தர்மபுத்திரர் பதில் சொன்னார்.

"தருமபுத்திரா! உன் சகோதரர்களும், மனைவியும் மரணமடைந்தார்களே. அவர்களை விட்டுவிட்டுவந்த மாதிரி இந்த நாயையும் தாங்கள் ஏன் விட்டுவிடக்கூடாது?" என்று தேவேந்திரன் கேட்டார்.

தருமபுத்திரர், "தேவேந்திரனே! இறந்துபோனவர்களுடன் சிநேகமும் சண்டையுமில்லையென்பது உலகத்தாருக்குத் தெரிந்த விஷயம். எனது சகோதரர்களும் கிருஷ்ணனும் மரணமடைந்தபொழுது அவர்களுடைய உயிர்திரும்பிவரும்படி செய்யஎனக்கு சக்தியில்லை. ஆகையினால் அவர்களை விட்டுவிட்டேன். அவர்கள் உயிருடனிருக்கும் பொழுது நான் அவர்களைக் கைவிடவில்லையே. ஆனால் இந்த நாய் உயிருடனிருக்கிறது. இதை விட்டுவிடுவது மகா பாபம்" என்றார் தருமபுத்திரர்.

நாய் ரூபத்தைத் தரித்திருந்த தருமதேவதை அவர்சொல்லியவார்த்தைகளைக்கேட்டு தர்மபுத்திரர் தர்மத்தைக் கைவிடாமல் உறுதியாயிருப்பதைக்கண்டு மிகவும் மகிழ்ந்து, தர்மபுத்திரர் முன்தோன்றி "புத்திரா! நீ தருமத்தைக் கைப்பற்றியிருப்பதைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். சுவர்க்கத்திற்குப்போகலாமென்று சொல்லி, யாவரும் தர்மபுத்திருடன் சுவர்க்கலோகத்திற்குப் போனார்கள்.

ஜீவகாருண்ணியம் தர்மபுத்திரரை எப்பேர்ப்பட்ட நிலைமைக்குக் கொண்டுவந்தது! இந்தக் கதையால் மகாத்துமாக்களுக்கு ஜீவகாருண்ணியமே முக்கிய தர்மமென்று நன்றாய் விளங்குகிறதல்லவா?

பகிரங்கமாக நாய்களை யடித்துக் கோல்லுதல்.

நம் தேசத்தில் இப்பொழுது வெகு முனிசிபல் பட்டணங்களில் முனிசிபாலிடி அதிகாரிகள் நாய்களைக் கொல்லுவதற்காக சில மாதங்களில் உத்தரவளிக்கின்றார்கள். பைத்தியம் பிடித்த நாய்கள் கடிப்பதால் ஜனங்களுக்கு அநேக கெடுதிகள் உண்டாகின்றன. அவ்வித கெடுதிகள் உண்டாகாவண்ணம் அவ்விதமுள்ள நாய்களைக் கொல்லுவதில் நன்மையாம். ஆனால் இக்கொடிய காரியத்தைச் செய்பவர்கள் குரூரமனதையுடைய ஒரு முரட்டுசாதியார். அவர்கள் வெறிநாய்களை மாத்திரமன்றி, சாதுவான நல்ல நாய்களையும் இரக்கமின்றி தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக கொல்லுகின்றார்கள். அவைகளைக் கொல்லும்விதமும் சென்னப்பட்டணம் தவிர இதர பட்டணங்களில் மிகவும் கொடியதாயிருக்கிறது. அவர்கள் ஒரு பெரிய கோலினால் அதன் தலை பிளந்துபோகும்படி அடிக்கிறார்கள். அது தட தட வென்று தன் கால்களை உதைத்துக்கொண்டு இரத்தம் தாரைதாரையாக கக்கிக்கொண்டு கீழே விழுகிறது. அப்பாபத்திற்கு அஞ்சாதவர்கள் அதை நடுத்தெருவில் இழுத்துக்கொண்டு போகிறார்கள்.

இவ்வித கொடிய காரியத்தைப் பார்ப்பவர்களுடைய மனது எவ்வளவு சங்கடப்படுகிற தென்பதைச் சொல்லமுடியாது. இவ்வித சங்கடத்தை நீக்குவதற்காக ஜனங்கள் நன்மையைக்கோரி முன்சொன்ன அதிகாரிகள் சென்னையில் செய்விப்பதுபோல் நாயின் கழுத்தில் ஒரு கயிற்றைக் கட்டிக்கொண்டு போய் (Lethel Chamber) லீதல் சேம்பர் என்கிற இயந்திர சகாயத்தினால் அதைக் கொல்லும்படிசெய்தல் மிகவும் நல்லது. அந்த இயந்திரத்தை ஏற்படுத்த முடியாமற்போனால் இவ்வித கொடிய காரியத்தைச்செய்து ஜனங்களுக்கு மனவருத்தத்தை யுண்டுபண்ணுவதைவிட ஒன்றும் செய்யாமலிருப்பது நலமே. ஆகையால் மேற்கூறிய அதிகாரிகள் எங்கள் மனுவைக்கேட்டு எவ்வித பாபத்தையும் அறியாத சாதுவான நாயைக் கொல்லாமலிருக்கும்படியும், அவசியமாய் கொல்லவேண்டிய பைத்தியம்பிடித்த நாய்களை இயந்திர சகாயத்தினாலேயே கொல்லும்படியும், உத்தரவு அளிப்பார்களென்று நம்புகிறோம். இவ்விதம் நாய்களை நடுத்தெருவில் கொல்லும்படிசெய்தல் பிரஜைகளின் மனதுக்கு வெறுப்பை உண்டாக்குவதல்லாமல், அவர்களைக் கூட நாளாவர்த்தியில் குரூர இருதயமுடையவர்களாகவும் செய்யும் என்பதற்குத் தடையில்லை.

சையாம் தேசத்து குரங்குகளின் புத்தி சாதுர்யம்.

மிருகங்களுக்கு அறிவில்லையென்று சிலர் நினைக்கின்றார்கள். அப்படி நினைத்தல் பிசகு. அவைகளுக்குக்கூட ஈஸ்வரன் கொடுத்த அறிவுண்டு. ஆனால் அவைகளுக்குப் போதிக்கும்விதம் மனிதருக்கும் போதிக்கும் விதத்தைப்பார்க்கிலும்வித்தியாசப்படுகிறது. அவ்வித்ம் தெரிந்து போதித்தால் அது அந்த போதனையை அறிந்துகொண்டு எஜமானனுக்கு ஒரு வேலைக்காரன்போல் எல்லாக் காரியங்களையும் செய்கின்றது இதற்கு திருஷ்டாந்தமாக ஒரு கதை:—சையாம் தேசத்து வர்த்தகர்கள் நாணயங்களின் நன்மை கெடுதிகளைத் தெரிந்துகொள்வதற்காக வாலில்லாக் குரங்குகளை உபயோகிக்கின்றார்கள். அவர்கள் அக்குரங்குகளை வேடிக்கைக்காகவளர்த்து அவைகளுக்கு அநேக அற்புத காரியங்களைப் போதிக்கின்றார்கள். அவைகள் அவர்களுடைய சகவாசத்தினால் புத்தி சாமர்த்தியமுடையதாய் அவர்கள் கற்பிக்கும் விஷயங்களை அறிந்து அவ்விதம் செய்கின்றன. நாணயங்களின் நன்மை கெடுதிகளைக் கண்டுபிடித்தல் அவைகள் செய்யும் அற்புதகாரியங்களிலொன்று. ஒவ்வொரு கடையிலும் வர்த்தகர்கள் பக்கத்தில் ஒரு குரங்கு உட்கார்ந்துகொண்டிருக்கும். சாமான்கள் வாங்குபவர்கள் கொடுக்கும் நாணயத்தை வர்த்தகன் அதன் கையில் கொடுப்பான். அது தன் பற்களால் கடித்து அதைப் பரிக்ஷிக்கும். அது நல்ல நாணயமானால் அதைப் பணப்பெட்டியில்போடும். அப்படியில்லாவிடில் அதை பூமியின்மீது எறிந்துவிட்டு கோபத்தைக் காண்பிக்கும் பாவனையாக கீச்கீச் என்று கத்தும். இவ்விஷயத்தில் அது சிறிதும் பிசகுசெய்யாது. அது மிக்க சாக்கிரதையுடன் எப்படிப்பட்ட தப்பு நாணயத்தையும் கண்டுபிடிக்கும். நாணயங்கள்

விஷயத்தில் அதை மோசம்செய்ய எவராலும் முடியாது. இவைகளுக்கு அவ்வர்த்தகர்கள் இந்த வித்தையை எப்படி கற்பித்தார்களென்பதை ஆங்கிலேயர்கள் தெரிந்து கொள்ளமுடியவில்லை. சையாம் வர்த்தகர்கள் இந்த ரகசியத்தை அவர்களுக்குத் தெரிவிப்பதில்லையாம்.

பசுக்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு புதிய உபாயம்.

இரண்டு மனிதர்களின் கட்டை விரலின் ரேகைகள் ஒரேவிதமாயிராதென்று எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. கட்டை விரலின் முத்திரையினுல் மனுஷரைக் கண்டுபிடிக்கும்வழி சில ராஜாங்க விவகாரங்களில் வழக்கத்திலிருக்கிறது. இவ்விதமே மூக்குக் குறியினுல் பசுக்களின் பேதத்தைக் கண்டு கொள்ளும்விதம் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டது.

மூக்கின் மடிப்புகள் இரண்டு பசுக்களுக்கு ஒரேவிதமாயிரா. மூக்கின் மத்தியிலிருக்கும் மெலிந்த சதையைக் குழம்பான மையால் நனைத்து மையை இழுக்கக்கூடிய ஒரு விதமான காகிதத்தினுல் அதை ஒற்றினுல் அதன்பேரில் ஒரு குறி ஏற்படும். இக்குறியால் கால் நடைக்காட்சியில் கலந்துபோன பசுக்களை எளிதில் கண்டுகொள்ளலாம். இக் குறியை எடுத்துவைத்தல் பசுக்கள் திருடர்கள் கொண்டுபோனுல் சுலபமாய் அறிந்து கொள்வதற்கு வழியாகும். பசுக்களை மந்தை மந்தையாக வைத்துக்கொண்டிருப்பவர்கள் இவ்விஷயத்தைக் கவனிப்பார்களாக.

S. P. C. A. எஸ். பி. சி. ஏ.

எஸ். பி. சி. ஏ. என்னும் பதங்களுக்கு அர்த்த மென்ன? மிருகங்களைக் குரூரமாய் நடத்துவதைத் தடுக்கும்படி ஏற்படுத்தப்பட்ட சங்கமே. இது மிகவும் விசேஷித்த சங்கமாகவிருப்பது மல்லாமல் உலகமெங்கும் கிளைச் சங்கங்களுடையதாயிருக்கிறது. ஜீவப்பிராணிகளைக் குரூரமாய் நடத்துவதைத் தடுப்பதிலும் அவைகளைப் பாதுகாப்பதிலும் இச்சங்கம் அதிகவேலை செய்திருக்கின்றது. தங்கள் வசமிருக்கும் மிருகங்களைக் குரூரமாய் நடத்துகிறவர்களையும், வேலைசெய்யச் சக்தியற்ற மிருகங்களை வேலை வாங்குகிறவர்களையும், இச்சங்கத்தார் போலீஸ் மூலமாக தண்டித்தும் அவர்களுக்குப் புத்தி புகட்டியும் வருகிருர்கள். எவ்விதமான குரூர நடக்கையையும் அருவருக்கும் எண்ணம் ஜனங்களுக்குள் உண்டாகும்படி இச் சங்கம் உழைக்கிறது.

அநேக ஜனங்கள் ஒருவரும் தாங்கள் செய்வதைப் பார்க்கவில்லை அல்லது கவனிக்கவில்லை யென்று குரூரமாயும் கேவலமாயும் நடந்து கொள்ளுவார்களே யானல் அது எவ்வளவு பரிதபிக்கத் தகுந்த விஷயம்! ஆனுல் தாங்கள் மிருகங்களை நடத்தும் விதத்தை மற்றவர்கள் கவனிக்கிருர்களென்பது தெரிந்தால் சற்று ஜாக்கிரதையாக இருப்பார்கள்.

இந்தக் காரியங்களைச் செய்வது மாத்திரம் இச்சங்கத்தின் நோக்கமல்ல; ஆனுல் வாயற்ற பிராணிகளின் சம்பந்தமாய்த் தங்கள் மேலிருக்கும் உத்தரவாதத்தைச் சிறுவர் உணரும்படி செய்வது அதின் ஆவல்.

பிராணிகளின் மீது தயையைப்பற்றிய கல்வி அமெரிக்கா தேசத்தில் மிக்க விசேஷித்ததாக எண்ணப்படுவதால் பள்ளிக் கூடங்களில் ஒவ்வொருவரும் கட்டாயமாய்ப் படிக்கவேண்டிய கல்வியாக நியமிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்வியின் நோக்கமென்னவெனில் ஒவ்வொரு ஜீவபிராணியிடத்திலும் இரக்கத்தோடும் பட்சத்தோடும் நடந்து கொள்ளவும், மனிதரைப்போலவே பிராணிகளுக்கும் அவையவைகளுக்குரிய சிலாக்கிய பாக்கியங்களுண்டென்பதை மனிதர் உணர்ந்து கொள்ளவும் வேண்டுமென்பதே.

இச்சங்கம் இவ்வளவு மேன்மையானதாயிருந்தால் ஏன் இது ஒவ்வொரு பெரிய நகரிலும் ஸ்தாபிக்கப்படவில்லை? இது அநேக இடங்களில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இன்னும் தேசம் முழுவதும் பரவவேண்டுமென்பது அத்தியா அவசியம். எல்லாரும் இவ்விஷயத்தில் அபிமானம் காண்பித்துத் தங்களாலானமட்டும் இச்சங்கத்திற்கு உதவி புரிவார்களானுல் எளிதாய்த் தேசமெங்கும் பரவச் செய்யலாம்.

PRINTED BY GEORGE KENNETH AT THE DIOCESAN PRESS, POST B[illegible], MADRAS—B.1147.

ON SEEING A WOUNDED HARE

Inhuman man! curse on thy barbarous art,
And blasted be thy murder-aiming eye:
May never pity soothe thee with a sigh,
Nor ever pleasure glad thy cruel heart!

Go, live, poor wanderer of the wood and field,
The bitter little that of life remains;
No more the thickening brakes and verdant plains
To thee shall home, or food, or pastime yield.

Seek, mangled wretch, some place of wonted rest,
No more of rest, but now thy dying bed!
The sheltering rushes whistling o'er thy head,
The cold earth with thy bloody bosom prest.

Oft as by winding Nith, I, musing, wait
The sober eve, or hail the cheerful dawn,
I'll miss thee sporting o'er the dewy lawn,
And curse the ruffian's aim, and mourn thy hapless fate.

ROBERT BURNS.

Convictions for the Year 1922.

This return is published to inform the public of the nature and extent of acts of cruelty to animals discovered by the Society in the City of Madras.

The following **CONVICTIONS** for cruelty to animals were obtained in Madras during the year 1922 by the Society's agency:—

1.	Working Horses in an unfit state	67
2.	Do. Ponies do.	482
3.	Do. Bullocks do.	1,286
4.	Do. Buffaloes do	1
5.	Do. Mules do	...
6.	Cows ill-treated	1
7.	Calves do.	61
8.	Pigs do.	2
9.	Fowls and Duck do.	7
10.	Goading Bulls	91
11.	Owners causing cruelty	47
	Total ...	2,045

1922-ஹு த்தில் ஜீவ ஹிம்ஸைக்காகச் செய்த தண்டனைகளின் பட்டி.

அடியில் குறித்த ஜீவ ஹிம்ஸையான குற்றங்கள் 1922-ஹுத்தில் இந்தச் சங்கத்தாரால் கண்டறியப்பட்டுத் தண்டிக்கப்பட்டன:—

1.	உழைக்கச் சக்தியில்லாமல் நோயாளியாயிருந்த குதிரைகளை வருத்தி வேலை வாங்கினதற்காகத் தண்டித்த குற்றம்	67
2.	,, குதிரைமட்டங்களை ,, ...	482
3.	,, எருதுகளை ,, ...	1,286
4.	,, எருமைக் கிடாக்களை ,, ...	1
5.	,, கோவேறு கழுதையை ,, ...	....
6.	பசுக்களைத் துன்பப்படுத்திய குற்றம்	1
7.	கன்றுக் குட்டிகளைத் துன்பப்படுத்திய குற்றம்	61
8.	பன்றிகளை ,, ...	2
9.	கோழிகளும், வாத்தும், ,, ...	7
10.	எருதுகளை தாற்றுக்கோலால் தூண்டினது	91
11.	சொந்தக்காரர்களே செய்த மேற்குறித்த குற்றங்கள்	47
	மொத்தம்	2,045

இந்தச் சங்கத்தின் காரியங்கள் அவரவர்கள் இஷ்டப்பட்டுக் கொடுக்கும் உபகாரப் பொருளாலேயே நடத்தப்படுகின்றன.

The Society is supported only by Voluntary Contributions.